# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பண்ருட்டி

## முதலேற்பு வழக்கு எண்.308/2014

1969ம் ஆண்டு 44வது பிரமாண சட்டத்தின் 4வது பிரிவின் கீழ் திருமதி. எம். ஆர்த்தி, எம்.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, அவர்களால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்பட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

பெயர் : தவமணி

க/பெயர்: பழனிவேல்

நாள் : 14.07.2023

வா.சா.1 .

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

எனது கணவர் இன்று என்னுடன் நீதிமன்றத்திற்கு வந்துள்ளார் என்றால் சரிதான். கடைசியாக நடைபெற்ற நீதிமன்ற சாட்சியத்தில் நான் சாட்சியம் அளித்த விவரம் குறித்து எனது கணவரிடம் தற்போது கூறினேன் என்றால் சரிதான். எனது கணவருடன் கடந்த 4,5 வருடமாக பேச்சுவார்த்தை இல்லை என நான் கூறிய சமயத்தில் எப்போது எனது கணவருடன் பேச ஆரம்பித்தேன் என்றால் 3 நாட்களுக்கு முன்னர்தான் எனது கணவரை அழைத்துவந்து இவ்வழக்கு தொடர்பாக பேசினேன். தற்போது எனது கணவர்தான் சென்று வழக்கறிஞரை அழைத்துவந்தார் என்றால் சரிதான். தற்போது எனது கணவரை எனது தரப்பில் விசாரிக்க உள்ளேன். நான் தற்போது பண்ருட்டியில் உள்ள மேலப்பாளையத்தில்தான் குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான்.

எனது பிரமாண வாக்குமூலத்தில் காட்டாண்டிக்குப்பத்தில் நான் குடியிருப்பதாக தவறு என்றால் சரிதான். எனக்கு 2 பிள்ளைகள். எனது பிள்ளைகள் தனியாக வீடுகட்டி குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். நான் எனது கணவருடன் மேலப்பாளையத்தில் வசித்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் எனது சின்ன மகனுடன்தான் வசித்து வருகிறேன். தாவா சொத்தை யார் கண்காணித்து வருவது என்றால் நான்தான் கவனித்து வருகிறேன். கண்ணபிரான் எனது மூத்தார். எனது மூ

த்தாருக்கும், எங்களுக்கும் இடையே நிலம் சம்மந்தமாக வழக்கு எதுவும் இல்லை. பார்த்தசாரதி பெயரில் நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் மகாலட்சுமி, கணேசமூர்த்தி ஆகியோர்களது பெயரில் வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை. நான் பார்த்தசாரதிமீது போட்ட வழக்கு தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றம் வரை வழக்கு நடந்தது என்றால் சரியல்ல. ரங்கசாமி பெயரில் நாங்கள் ஒரு வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது.

தாவா சொத்து கிரையம் பெறுவதற்கு முன்பு அதற்கான மூல ஆவண பத்திரம், வில்லங்கம் பார்த்தேன். எனது கிரையதாரருடைய தந்தை அவருக்கு எழுதிவைத்த பத்திரத்திற்கான நகலை மட்டும் எங்களிடம் கொடுத்தார். பிரதிவாதி சங்கீதாவை நான் பார்த்ததில்லை. மேற்படி நிறுவனத்தின் மேலாளரான வெங்கடேசன் என்பவரை எனக்கு தெரியாது. நான் கிரையம் வாங்கியபோது அனுபவித்த சொத்தைதான் இந்நாள்வரை அனுபவித்து வருகிறேன் என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கியபடி விஸ்தீரணம் குறைகிறது. சரியாக எவ்வளவு விஸ்தீரணம் குறைகிறது என்பது குறித்து எனக்கு தெரியாது. தோராயமாகத்தான் சொல்ல தெரியும். நான் சரியான விவரங்களை குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்யவில்லை எனவும், இவ்வழக்கை நடத்துவதற்கான வழக்குமூலம் எனக்கு இல்லை எனவும், அதனால் நான் தாக்கல் செய்துள்ள வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடிக்குரியது எனவும், சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:</u>** இல்லை.